# SOCIAL INFLUENCE OF FOLK SONG - AN EVALUATION

Mr.Tharumarasa Ajanthakumar
B.A (Hons) M.Phil in Tamil, Teacher J/Aliyawalai C.C.T.M .School

**Abstract**
Folk song is made up by laity. It has to become a Symbol of Historical and social culture and Historical Significance. Even as Globalization Works together to create a Single culture, Groups and races are still struggling to maintain their pluralism. In this way the Folk Song which are one of the literature are being rediscovered. Folk songs are intertwined from birth to death in terms of individual life and have the potential to extend into social history as well. The poetry and content of the songs combined with music attracts the mind as they vary according to each region group and profession. Courses are determined by social and differences. Lullaby, game song, fun song, love song, vocal song, analogy are not only relevant but also symbolic of the culture of society. They are not just word games but also cultural indicators that are closer to reality. Although many studies on folk songs have been advanced studies on their social cultural significance are few. it is important to examine the 'Elam' Songs and poems. the Purpose of this study is to uncover to socio cultural ( Combing social and cultural factors dynamics and historical evidence of folk songs. this study has been carried out largely in detail. it is anticipated that the need to document folksong and their social significance will rise.

**Keywords**: Folk song, Pluralism, Social history

### 1.0 அறிமுகம்

நாட்டார் பாடல்கள், கிராமிய மக்களுக்கு மட்டும் உரியவை என்று கருதிய காலம் போய், அவற்றை ஒரு தேசிய செல்வமாக மதிக்கும் காலம் இது. வளர்ச்சியடைந்த, வளர்ச்சி குறைந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கல்வித்துறையினரும் ஆய்வறிவுத் துறையினரும் கடந்த சில பத்தாண்டுகளாக நாட்டுப்பாடல்களில் அதிக அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர்.[1] இன்றைய அதிநவீன உலகத்தையும் கவர்கின்ற விடயமாக நாட்டார் இலக்கியம் விளங்குகின்றது. இவற்றில் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை நாட்டார் பாடல்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. இன்றைய உலகமயமாக்கல் சூழலில் ஒற்றைப் பண்பாடு நோக்கிய பயணங்கள், இவற்றின் முக்கியத்துவத்தினை கீழிறக்குவதுபோலத் தோன்றினாலும் இன்னொருவகையில் அவை மிக அழுத்தமாக ஆவணமாகிக் கொண்டே இருக்கின்றன. பாமர மக்களால் பாடப்பட்டாலும் இசையும் இனிமையும் கலந்த வெளிப்பாடும் சமூகத்திற்கு செய்தி சொல்லும் உள்ளடக்கமும் கொண்டிருப்பதனாலேயே இலக்கியவகைமையாய்த் தகுதி பெறுகின்றன. விளையாட்டுகளும் தொழில்முறைகளும் அடைந்த மாற்றத்தால் வாய்மொழி மரபு அரைவாய்மொழி மரபாக எழுத்துடன் நிலைபெற்றுவிட்டது. காணொளிகளாகவும் ஒலிப்பதிவுகளாகவும் பரிணாமம் அடைந்துவிட்டன. நாட்டார் பாடல்களின் உள்ளடக்கம் சமூக, பண்பாட்டு வரலாறாகவும் உளவியல் நுட்பமாகவும் அழகியல் புனைவாகவும் மதிப்பீடு செய்யப்படுவதைக் காணலாம். பாமர மக்களின் வடிவங்கள் இன்றைய உலகின் இசைத்தேவையைக் கூட பூர்த்திசெய்யக் கூடிய வகையில் விளங்குவதுதான் கவனத்திற்குரியது. இன்றைய திரையிசைப்பாடல்களும் இதற்குச் சான்றாக உள்ளன.

நாகரிகம் என்ற ஒரு போர்வையை மனிதன் தனக்குப் போர்த்தும் போது தனது பண்பாடுகள் கலாசாரங்கள் மீதும் அவற்றைச் சேர்த்துப் போர்த்திக்கொள்கின்றான். அடையாளங்கள் அற்ற வெறும் மனிதனாகவே அவன் காட்சியளிக்க முற்படுகின்றான். நாட்டார் பாடல்களை ஆராயும் போது அவை வரலாற்றினதும் பண்பாட்டினதும் சமூகத்தினதும் தொழில்முறைகளினதும் ஆவணமாகும் முக்கியத்துவத்தைக் காண்கின்றோம். தாலாட்டுப்பாடல், விளையாட்டுப்பாடல், வேடிக்கைப்பாடல், காதற்பாடல், தொழில்முறைப்பாடல், ஒப்பாரி என்பன ஓர் ஒழுங்கமைவில் பின்னியுள்ளன. அவை பிரதேச, சமூக, இன, தொழில் வேறுபாடுகளுக்கு அமைய புதிய தோற்றத்தைத் தந்து நிற்கின்றன. மன்னார், மட்டக்களப்பு, மலையகம், யாழ்ப்பாணம், தென்னிலங்கை என்ற பிரதேச வேறுபாடுகள் புதிய பரிமாணத்தில் நாட்டார் பாடல்களை வைத்திருக்கின்றன. இவற்றின் ஊடாக மானிடவியலாளர், சமூகவியலாளர், மொழியியலாளர்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும்

வாய்ப்பு ஏற்படுகின்றது. தாலாட்டில் இருந்து ஒப்பாரி வரை தனிமனித வரலாறோடு மட்டும் முடிந்துவிடாது ஒரு சமூகத்தின் வரலாறாக நிலைகொள்கின்றன நாட்டார் பாடல்கள். ஈழத்திற்கென்று தனித்துவமான கவி மற்றும் அம்பாப் பாடல்களும் இன்னும் கவனத்தைக் கோரி நிற்கின்றன.

**2. தாலாட்டுப்பாடல்கள்**

ஒரு குழந்தையை உறங்க வைக்கும் போது தாலாட்டுப் பாடல்களைப் பாடுவார்கள். அப்பாடலின் ஊடாகச் சொந்தங்களை அறிமுகப்படுத்துகின்ற நிகழ்வு இயல்பாகவே இடம்பெறுகின்றது. தாய்க்கும் பிள்ளைக்குமான உறவு இன்னும் நெருக்கமாக்கப்படுகின்றது. அறிவை அடையும் முன்னரே எல்லாவற்றையும் பாடல் ஊடாக மனதில் கலந்துவிடச் செய்கின்ற உளவியல் நுட்பம் உடையனவாகவே அப்பாடல்கள் விளங்கின.

*'மாமி அடிச்சாளோ மல்லிகைப் பூச் செண்டாலே*

*பாட்டி அடிச்சாளோ பால்வார்க்குச் சங்காலே?*

*ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டுங்கையாலே?*

*அண்ணா அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே?'*[2]

*"கட்ட மச்சான் நெட்ட மச்சான் காய்கறி கொண்டாற மச்சான்*

*பொட்டிதனில் முட்டாயும் போட்டுவாடா சின்னமச்சான்"*[3]

இன்று உறவுமுறைகளையே ஒழுங்காக அறியாத தலைமுறையே வளர்ந்து வருகின்றது. தாலாட்டு என்பது நாவை அசைத்துப் பாடுவது என்றாலும் அது உள்ளத்தை அசைத்து அதற்குள் இரத்த உறவுகளை ஊன்றி நடுகின்ற வேலையையும் இயல்பாகச் செய்வதைக் காணலாம்.

**3. விளையாட்டுப்பாடல்கள்**

வளருகின்ற பிள்ளைகள் விளையாடும் போது பலபாடல்களைப் பாடுவார்கள். அது அவர்களின் விளையாட்டைப் போலவே துள்ளலும் துடிப்பும் கொண்டவையாக விளங்குவதைக் காணலாம். சாய்ந்தாடும் போதும் கிட்டியடிக்கும்போதும் கும்மியடிக்கும் போதும் கோலாட்டத்தில் ஈடுபடும் போதும் கொம்பு விளையாட்டின் போதும் ஊஞ்சல் ஆடும் போதும் பாடல்களைப் பாடினார்கள். விளையாடும் முறைகளும் அதில் உள்ள வேடிக்கைகளும் இறை நம்பிக்கைகளும் ஒன்று சேர்வதன் உற்சாகமும் இப்பாடல்களில் வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம். இன்று விளையாடும் போது இப்பாடல்களை சிறுவர்கள் பாடுவதைக் கேட்கமுடிவதில்லை. சிறுவர்களின் முதுகும் உள்ளமும் புத்தகச் சுமைகளால் வளைந்துவிட்டன. இந்தப்பாடுகள் இந்தப்பாடல்களை மறக்கவைத்துவிட்டன. கிரிக்கெட், உதைப்பந்தாட்டம் என்ற நாகரிக விளையாட்டுகள் மரபார்ந்த விளையாட்டுகளை மறக்கச் செய்த சூழலில் விளையாட்டும் இல்லை அந்தப் பாடல்களும் இல்லை என்ற அவலமே ஏற்படுகின்றது.

கிட்டியடிக்கும் போது ஏற்படும் உற்சாகத்தை இந்தப்பாடலைப் பாடும்போது நாமும் உணர்ந்து கொள்ளலாம்.

*'மாம்பட்டைமருதம்பட்டை வெளவாலேடிய தென்னம்பட்டை*

*பூம்பட்டை புளியம்பட்டை பட்டணம் பட்டணம் பட்டணம்'*[4]

விளையாட்டுப் பாடல்களாய் இவை சுருங்கிவிடாமல் ஆன்மிக விடயங்களும் சமூக திருத்தச் செய்திகளையும் இவை தமக்குள் வைத்திருந்தன என்பது முக்கியமான விடயமாகும்.

*'கள்ளுச் சாராயம் தனைக்குடித்து சடை*

*கஞ்சா அபினி மிகப் புசித்தே*

*துள்ளி விழுந்தலைந்தே நடக்கின்றவர்*

*சுருங்கக் கும்மியடியுங்கடி –எரி*

*நெருங்கக் கும்மியடியுங்கடி'*[5]

**4. வேடிக்கைப்பாடல்கள்**

தாலாட்டுப் பாடல்களைவிடவும் விளையாட்டுப் பாடல்களை விடவும் வேடிக்கைப்பாடல்களில் இன்னொரு உலகத்தைக் காணமுடிகின்றது. எள்ளலும் நகைச்சுவை உணர்வும் மிக்க இப்பாடல்கள் சமூக நடைமுறைகளின் கோபத்தினாலும் வெறும் வேடிக்கைக்காகவும் பாடப்பட்டன. சில விமர்சனங்களை வேடிக்கை போலக் காட்டிக்கொண்டு வெளிப்படுத்துவதற்காகவும் பாடப்பட்டன. இவ்வகைப்பாடல்களின் ஊடாக அக்காலத்துச் சமுதாயத்தை விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அவற்றில் உள்ள இசையும் நயமும் இன்றைய சினிமாப் பாடல்களால் பெரிதும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். சங்க இலக்கியங்களில் இருந்து கண்ணதாசனும் வைரமுத்துவும் தமது பாடல்களை மறுவரைவுகளாக்கிக் கொண்டது போல நாட்டார் பாடல்கள் இன்று திரைப்படங்களை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன. வேடிக்கைப்பாடலின் சுவைக்குப் பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

*'சிங்கிலி நோனா சிங்கிலி நோனா*

*சீப்புக் கொண்டைக்காரி*

*பார்த்த பேர்கள் ஆசைப்படும்*

*பந்துக் கொண்டைக்காரி'*[6]

**5.காதற்பாடல்கள்**

காதற்பாடல்களும் வியக்கக்கூடிய உவமைகளும் கற்பனைகளும் நிறைந்தவையாக உள்ளன. சங்ககால முதல், கரு, உரிப்பொருட்களின் தொடர்ச்சியாய் இயற்கையோடு உணர்வைப் பொதிந்து வைத்துப்பாடுகின்ற அழகிய பாடல்களாய் மனதைக் கவர்கின்றன.

*'கடலே இரையாதே காற்றே நீ வீசாதே*

*நிலவே எறியாதே என்ரை நீலவண்டு போய்ச்சேருமமட்டும்*

*மாமி மகளே என்ர மருதங்கிளி வங்கிசமே*

*ஏலங் கிராம்பே உன்னை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்'*[7]

உண்மையான அன்பும்தீராத ஆசைகளும் இக்காதல் பாடல்களின் ஆதார சுருதியாய் விளங்குகின்றன.

'ஓடையிலே போற தண்ணி தும்பிவிழும் தூசிவிழும்

வீட்டுக்கு வாங்க மச்சான் குளுந்த தண்ணி நான் தாறேன்' [8]

**6. தொழிற்பாடல்கள்**

சமூக அசைவியக்கத்தையும் மக்களின் தொழிற்பண்பாட்டையும் பிரதிபலிக்கக்கூடியவை தொழிற்பாடல்கள் ஆகும். ஏர்பூட்டும் போதும், அருவிவெட்டும் போதும், மீன்பிடிக்கச் செல்லும் போதும், தேயிலைத் தோட்ட வேலைகளின் போதும், சாலை அமைக்கும் தொழிலின் போதும் பற்பல தொழில்களின் போதும் களைப்பை மறக்கவும் தொழில்முறைகளைப் பாடவும் அதிகாரங்களைச் சாடவும் இப்பாடல்களை இவர்கள் பாடினார்கள். இவர்களின் சமூக நோக்கு இதில் முக்கியமானது.

**ஏர் தழைக்கவேணும் தம்பிரானே**

**எல்லோரும் வாழவேணும் தம்பிரானே**”[9]

என்பதில் உழைப்புப்பெருக்கமும் சமூகநலனும் வெளிச்சமாகின்றன.

**‘மட்டுருக்காலை அருவாளுமடித்து**

**மாவிலங்கன் பிடிசீவியிறுக்கி**

**வெட்டும் பிடியைச் சிறக்கவே போட்டு**

**வெள்ளித் தகட்டினால் விரல் கூட்டமிட்டு**

**வளர்ந்தருவி வெட்டும் இளந்தாரிமாரை..’** [10]

என்று தொடரும் பாடலில் தொழிற்பண்பாடு புலப்படுத்தப்படுகின்றது.

**‘ஊரான ஊர் இழந்தேன் ஒத்தபனை தோப்பிழந்தேன்**

**பாரான கண்டியிலே பெத்ததாயும் வீடிழந்தேன்’**[11]

என்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் பாடல் அவர்களின் சோகத்தைப் பாடுகின்றது. களைப்பை போக்கப் பாடப்பட்டவையாக மாத்திரமன்றி தமது களைப்பையும் துயரத்தையும் பாடுவனவாகவும் இவை விளங்கியிருப்பது கவனத்திற்குரியது.

தொழிற்பாடல்களில் மீனவர்சார்ந்த பாடல்கள் வலை இழுப்புப்பாடல்கள், தண்டு வலிப்போரின் பாடல்கள், கப்பற்பாட்டு, தோணிப்பாட்டு, ஓடப்பாட்டு ஏலப்பாட்டு, ஏலேலப்பாட்டு என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. கரைவலை இழுப்போரால் பாடப்படும் அம்பாப்பாடல்கள் குருநகர், வடமராட்சி கிழக்கு, மன்னார், முல்லைத்தீவு போன்ற பல இடங்களில் பாடப்படுகின்றன. கரைவலை இழுக்கும்போது பழைய பாடல்களையும், தேவைக்கேற்ப இயற்றியும் பாடப்படும் இப்பாடல்கள் சமயநம்பிக்கை, சமூகவிமர்சனம் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டிருந்தன. களைப்புநீங்குவதற்காக மட்டுமல்ல உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்தவும் இவை பயன்படுத்தப்பட்டன.

ஒருவர் பாட தொடர்ந்து பலரும் வளர்த்துச் செல்லும் இப்பாடல்களின் கவித்துவமும் கருத்துமோதல்களும் அவதானத்திற்குரியவை.

**ஏலை ஏலோ**

**கள்ளுக்குடிக்காதே காந்தி**

**ஏலை ஏலோ**

**கண்ணைப் பிரட்டுதே வாந்தி**

**ஏலை ஏலோ**[12]

இதற்கு வேறொருவர்

**ஓரா மீன் சுட்டிருக்கு**

**ஏலை ஏலோ**

**குடுவையில கள் இருக்கு**

**ஏலை ஏலோ**

**கள்ளுக்குடி நல்லதப்பா**

**ஏலை ஏலோ**[13]

என்று எதிரான கருத்துகளையும் வெளிப்படுத்தினார்கள். முதலாளிகள் மீதான விமர்சனத்தையும் வெளிப்படுத்தினார்கள். சம்மாட்டி,மண்டாட்டி ஆகியோர் இவர்களின் வசைக்கு ஆளாகுவதைப் பல பாடல்களில் காணலாம். ஊர் வசையும் இவர்கள் பாடல்களில் வெளிப்படுகின்றது.

**வேளைக்குச் சம்மாட்டியும்**

**ஏலை ஏலோ**

**தேநீரும் தாறானில்லை**

**ஏலை ஏலோ**

**மண்டாடி சாகானோ**

**ஏலே ஏலோ**

**மடியானோ கட்டையிலே**

**ஏலே ஏலோ** [14]

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பது நவீன விமர்சகர்களால் மறுக்கப்படுகின்றது. எனினும் ஒப்பனையற்ற கருத்துகளை நாட்டார் பாடல்களின் மூலம் தெளிவாக நாங்கள் பெற்றுக்கொள்ள முடியும். சமய ஐக்கியமும் அவர்கள் பாடல்களில் அதிகம் வெளிப்படுவதைக் காணலாம்.

**6. ஒப்பாரிப்பாடல்கள்**

தாலாட்டில் தொடங்கும் நாட்டார் பாடல் இறப்பின்போது ஒப்பாரிவரை நிள்கின்றது. இன்று அழுபவர்களின் எண்ணிக்கையே குறைந்துவிட்டது. செத்தவீட்டில் மாரில் அடித்தும் ஒன்று கூடியும் பல கதைகளைச் சொல்லி,பெருமை சொல்லி, அவலம் சொல்லி, வரலாறு சொல்லி, சொந்தமும் பகையும் சொல்லி, இறந்தவகை சொல்லிப்பாடுகின்ற புலம்புகின்ற மரபை ஒப்பாரிப்பாடல்களில் காணலாம்.

**பொன்னான மேனியிலே**

**பொல்லாத நோய் வந்ததென்ன**

**தங்கத் திருமேனியிலே- ஒரு**

**தகாத நோய் வந்ததென்ன** [15]

என்று தாயின் ஒப்பாரியும்

**ஓடியெல்லோ வந்திடுவேன் -உங்கள்**

**ஒழுங்கை தெரியாது**

**பாய்ந்தெல்லோ வந்திடுவேன் உங்கள்**

**படலை தெரியாது**[16]

என்று மனைவியின் ஒப்பாரியும் அவரவர் நிலையை அன்பை வெளிப்படுத்துகின்றன.

**7. கவி**

அம்பமாப்பாடல்களைப் போலவே தனித்துவமான நாட்டார் பாடல்களாக இவை விளங்குகின்றன. தமிழ்நாட்டின் தெம்மாங்குப் பாடல்களோடு இவற்றை ஒப்பிடலாம் என்று ஆரம்பத்தில் கூறப்பட்டாலும் இன்றைய ஆய்வாளர்கள் இவற்றின் தனித்துவங்களைப் பெரிதும் கூறிவருகின்றார்கள்.

**'சோனக மக்கள் மத்தியிற் தான் கவி உண்டு. இக்கவிகள் ஈரடிக்கண்ணிகளால் ஆனவை. அகப்பொருட் துறைகள் இவற்றில் நிறையவுண்டு.'**[17]

**'வாழைப் பழமே**

**வடி தயிரு சக்கரையே**

**சீனிரசமான வண்டே**

**உன்னைத் தின்னாமற் போகட்டோ'**[18]

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் வாய்மொழி மரபைச் சேர்ந்தன என்பதே பேராசிரியர் க.கைலாசபதியின் முடிவு. கிராமிய வாழ்வை ஒரு கபடமற்ற உலகத்தை அதன் குணத்தோடும் வாழ்வோடும் சுமந்த பாடல்கள் இன்று படிக்கும்போதும் பாடும்போதும் கேட்கும்போதும் தெவிட்டாதவையாக இலக்கியச்சுவை குன்றாதவையாக விளங்குகின்றன. இலக்கியத்தை முற்றிலும் உணர்வுத் தளத்தில் கட்டமைத்த இவர்களின் பாடல்கள் அனுபவங்களில் இருந்தும் வாழ்க்கையில் இருந்தும் உண்மைக்கு மிக நெருக்கமான தளத்தில் நின்று உரையாடியவை என்று கூறலாம். இப்பாடல்களில் உள்ள பாடபேதங்கள் கூட கால சமூக பேதங்களின் விளைவுகள் என்று கூறலாம். நாட்டார் பாடல்களின் சுவையை பாரதி உணர்ந்துகொண்டதனாலேயே அவன் மகாகவிஞன் ஆக முடிந்தது. இன்று மீண்டும் நாட்டார் பாடல்களின் கள்ளமற்ற ஆரோக்கியமான உலகுக்குள் நாம் நுழையும் போது யதார்த்தமும் உண்மையும் நெருக்கமும் உள்ள ஒருலகத்துக்குள் நாம் நுழைகின்றோம். அதுதான் பிரதானமான சமூக முக்கியத்துவம் ஆகும்.

**அடிக்குறிப்புகள்**

1. நு∴மான்.எம்.ஏ.,புஸ்பராஜன்.மு.,1976,அம்பா, அலை வெளியீடு, யாழ்ப்பாணம், ப 1

2. கல்விவெளியீட்டுத் திணைக்களம்,1976, நாட்டார் பாடல்கள், கொழும்பு. ப.30
3. மேலது ப.33
4. மேலது ப.37
5. மேலது ப.39
6. மேலது ப.44
7. மேலது ப.45
8. மேலது ப.45
9. மேலது ப.49
10. மேலது ப.51
11. மேலது ப.
12. அஜந்தினி.ஆ., 2017, மருதசாகரம், வடமராட்சி கிழக்குப் பிரதேச மீனவ வழக்காறுகள்,வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம்,ப.53
13. மேலது ப.87
14. மேலது ப.92
15. மேலது ப.54
16. கல்விவெளியீட்டுத் திணைக்களம்,1976, நாட்டார் பாடல்கள், கொழும்பு. ப.30
17. நடராசா.எப்.எக்.சி.,1962,ஈழத்து நாடோடிப்பாடல்கள், ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம், ப 13
18. மேலது ப.82

**உசாத்துணை நூல்கள்**

1. புஸ்பராஜன்.மு.,1976,அம்பா, அலை வெளியீடு, யாழ்ப்பாணம்
2. கல்விவெளியீட்டுத் திணைக்களம்,1976, நாட்டார் பாடல்கள், கொழும்பு
3. மருதசாகரம், வடமராட்சி கிழக்குப் பிரதேச மீனவ வழக்காறுகள், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம்.
4. பாலசுந்தரம்.,இ., 1979,ஈழத்து நாட்டார் பாடல்கள், தமிழ்ப்பதிப்பகம், யாழ்ப்பாணம்.
5. பாலசுந்தரம்.,இ.,1991, நாட்டார் இசை இயல்பும் பயன்பாடும், நாட்டார் வழக்கியல் கழகம், யாழ்ப்பாணம்.
6. நடராசா.எப்.எக்.சி., 1962,ஈழத்து நாடோடிப்பாடல்கள், ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.
7. விசாகரூபன்.,கி.,2004, நாட்டார் வழக்காற்றியல் - ஓர் அறிமுகம், மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம்.